<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | பிரபாகரன் | நாள் | 21.09.2023 |
| தகப்பனார் பெயர் | கந்தசாமி | | |

**<u>1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

17) என் முன்விற்பனையாளர் யார் என்றால், வையாபுரி என்பவர் தான் என் முன் விற்பனையாளர். என் கிரய ஆவணத்தில் மேற்படி எனது முன்விற்பனையாளர் வையாபுரிக்கு தாவா சொத்து எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், ராமலிங்கம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றதன் அடிப்படையில் வையாபுரிக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18) நான் வையாபுரியிடமிருந்து கிரயம் பெறும் சமயத்தில் மேற்படி வையாபுரியின் மூல ஆவணத்தை பெற்றுள்ளேனா என்றால், பெற்றுள்ளேன். அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன்.

19) வையாபுரியின் மூல ஆவணத்திலோ அல்லது வையாபுரியின் பெயரிலுள்ள கிரய ஆவணத்திலோ, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தின் வழியாக தாவா சொத்திற்கு செல்வதற்கான தடவழி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், மேற்படி கிரய ஆவணங்களில் தடவழி குறித்து கூறவில்லை. ஆனால், என் முன்விற்பனையாளர் வையாபுரியின் முன் விற்பனையாளரான ராமலிங்கம் தடவழி குறித்து ஜலகண்டாபுரம் டவுன் பஞ்சாயத்திற்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் வையாபுரியிடம் ஒப்படைக்கப்பட்டு நான் கிரயம் பெற்ற சமயத்தில் வையாபுரி மேற்படி ஆவணத்தை என்னிடம் ஒப்படைத்துள்ளார். அதன் அடிப்படையில்தான் தடவழி உள்ளதாக நான் கூறுகிறேன்.

20) நான் சொல்வது போல் அவ்வாறு தனியாக எவ்வித தானசெட்டில்மெண்ட் பத்திரமும் இல்லை என்றால், சரியல்ல. மேற்படி என் முன்விற்பனையாளரது முன்விற்பனையாளர் ராமலிங்கம் சொத்தை யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

21) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 கிரய ஆவணம் எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், முன்விற்பனையாளரது முன்விற்பனையாளர் ராமலிங்கம் சொத்தை நம்பெருமாள் கவுண்டர் மற்றும் அவரது மனைவி நல்லம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றதை தெரிந்து கொள்வதற்காக நான் நகல் பெற்று தாக்கல் செய்துள்ளேன்.

22) மேற்படி வா.சா.ஆ.11 கிரய ஆவணத்தில் ஆவடத்தூர் கிராம நத்தம் சர்வே எண்.227/1 எனவும், மேற்படி ஆவணத்தில் தாவா சொத்தானது இருபுறமும் கிழமேலடி 60 மற்றும் தென்வடலடி 30 அளவில் சொத்தானது 1800 சதுரடி அளவில் அமைந்துள்ளதாக கண்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.11 கிரய ஆவணத்தில் தடவழி குறித்து குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான்.

23) மேற்படி வா.சா.ஆ.11 கிரய ஆவணத்தை தான் மேற்படி ராமலிங்கம் என்பவர் மூல ஆவணமாக காண்பித்து வையாபுரிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. வையாபுரிக்கு, கிருஷ்ணசாமி செட்டியாரும், J.U.ராமலிங்கம் என்பவரும் எழுதிக் கொடுத்த கிரயம் ஆவணம் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 என்றால், சரிதான்.

24) மேற்படி வா.சா.ஆ.13 கிரய ஆவணத்தில் வையாபுரியின் முன்விற்பனையாளர்களான கிருஷ்ணசாமி செட்டியாரும், J.U.ராமலிங்கமும் வா.சா.ஆ.11 கிரய ஆவணத்தை தான் மூல ஆவணமாக காண்பித்துள்ளனர் என்றால், ஆவணத்தை பரிசீலித்தால் தான் எனக்கு தெரியும்.

(1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.